1982 ஏப்ரல் 2]

[முற்பகல் 10-10.]

வேண்டுமென்ற காரணத்திற்காக அதற்காக பொதுத்துறையிலே ஒரு நிறுவனத்தை அமைந்து அதைத் தயாரித்து அதை நட்டத்திலே நடத்துவது சரியல்ல. பொதுவாக டயர் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள், இந்தியாவிலே இருக்கின்ற 4 பெரிய டயர் தயாரிக்கும் நிறுவனங்களே நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே தொடங்கப்பட்ட திட்டம் கைவிடப்பட்டு விட்டது. இனிமேல் தொடங்கவேண்டுமென்றால் பொருளாதார ரீதியில், லாபமாக நடத்தமுடியுமா என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: கன்னியாகுமரி மாவட்டத்திலே நம்முடைய வனத் துறை மூலமாக விற்கப்படுகின்ற ரப்பர் தரத்திலே உயர்ந்த ரப்பராக இருக்கிறது. இந்தியாவிலே உள்ள பல்வேறு பெரிய கம்பெனிகள் அதை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் சொன்னார்கள், டயர் தயாரிக்கும் தொழில் லாபகரமாக இருக்க முடியாது என்று. ரப்பரிலிருந்து டயரைத் தயாரிக்கின்ற தொழில் இல்லாவிட்டாலும் ரப்பரிலிருந்து ஏனைய வேறு பொருட்களைத் தயாரிக்க கூடிய முறையிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன் வருமா? அப்படி அமைத்தால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அது வரப்பிரசாதமாக இருக்குமே, ஆகவே அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, பெரிய தொழிற்சாலை என்ற அளவுக்கு இல்லாவிட்டாலும் கன்னியாகுமரியில் கிடைக்கிற ரப்பரைப் பயன்படுத்தி சிறிய அளவில் ஏதாவது தொடங்க முடியுமா என்பதைப் பற்றி ஊரக தொழில் அமைச்சர் அண்ணன் கே. ஏ. கே அவர்கள் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக இந்த மன்றத்திலேயும் சொல்லியிருக்கிறார்கள். மேலவையிலும் கூறியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்

வினா எண். 734 திரு நன்னிலம் அ. கலையரசன் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்ட கரும்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாயூரம் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை கூட்டுறவு அமைப்பில் தொடங்கும் செயற் குறிப்பு ஆய்வில் உள்ளது. மைய அரசுக்கு மனு செய்யப்பட்டு உள்ளது.

திரு நன்னிலம் அ. கலையரசன்: தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே மாயூரம் தாலுக்காவிலும் நன்னிலம் தாலுகாவிலும் திருவிடை மருதூர் தாலுகாவிலும் கரும்பு சாகுபடியாளர்கள்

வீளைவிக்கின்ற கரும்பை தக்க தருணத்திலே ஆலைக்கு அனுப்புவதில் சங்கடப்படுகிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுத்து மாயூரம் தாலுகாவின் கடைசிப் பகுதியிலேயும், நன்னிலம் தாலுகாவின் கடைசிப்பகுதியிலேயும் திருவிடைமருதூர் தாலுகாவின் கடைசிப் பகுதியிலேயும் அந்த ஆலையை அமைப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, சுமார் $1\frac{1}{2}$ ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. தொடர்ந்து எடுத்த முயற்சியின் காரணமாக திருத்தணியிலே 8 கோடி ரூபாய் அளவுக்கு சர்க்கரை ஆலையை அமைக்க மைய அரசு சில நாட்களுக்கு முன்னதாக அனுமதி அளித்து இருக்கிறார்கள். தஞ்சையிலே விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையிலே ஒரு தொழிற்சாலை அமைக்க வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினாலே மிகு விரைவிலே சர்க்கரை ஆலையை கூட்டுறவு துறையில் அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. மத்திய அரசோடு தொடர்ந்து தொடர்புகொண்டு விரைவிலே அதை அமைக்க அரசு முயற்சிகளை எடுக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த சர்க்கரை தொழிற்சாலைகள் இன்னும் எத்தனை இடங்களில் அமைக்கலாம் என்கின்ற சாத்தியக்கூறுகளை அரசாங்கம் ஏதாவது பரிசீலனை செய்ததா? பரிசீலனை நடத்தியிருந்தால் எத்தனை இடங்களில்—இப்போது முடிவு செய்த ஆலைகளைத் தவிர,—ஆலைகளை அமைக்கலாம் என்ற ஆய்வு மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு இணங்க பல்வேறு இடங்களிலே பல்வேறு மாவட்டங்களிலே சர்க்கரைத் துறையின் சார்பிலே ஆய்வுகள் நடத்தப்பட்டன. சுமார் 10 தொழிற்சாலைகள் அளவுக்குக்கூட சர்க்கரை ஆலைகளைத் துவங்கமுடியும். ஆனால் சென்ட்ரல் பிளானிங் கமிஷனிடமிருந்து நமக்கு இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகளையும், 3 சிறிய சர்க்கரை ஆலைகளையும் அமைக்க அனுமதி வழங்கினார்கள்- திருத்தணியிலே ஒன்றும் தஞ்சையிலே ஒன்றும் இதைத்தவிர சிறிய சர்க்கரை ஆலைகளையும் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுவருகிறது. மற்ற இடங்களில் பொதுத் துறையிலேயும் கூட்டுறவுத் துறையிலேயும் சர்க்கரை ஆலையை துவங்க முடியாத இடங்களில் இருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும், விவசாயிகளுக்கு உதவி செய்யும் தனியார்கள் தொடங்க முன்வருவார்களால் அவர்கள் மனுக்களை பரிசீலனை செய்யலாம் என்று மத்திய அரசின் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்படி அவ்வாறு எற்படுத்த இதுவரையில் 6 மனுக்கள் அவர்களிடமிருந்து வந்திருக்கின்றன. கோவை, பெரியார் சேலம் போன்ற மாவட்டங்களில் எல்லாம். எனவே இவற்றையும் கருத்திற்கொண்டு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறோம். வெகுவிரைவிலே தனியார் துறையிலும் உரிமங்கள் கிட்டும் என்று நம்புகிறோம்.